

சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் (23.10.2025) வியாழக்கிழமை காலை இயற்கை எய்திய தகவல் அறிந்த வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். அதுபோது மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் உள்ளிட்ட ஈரோடு தெற்கு மாவட்ட கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள் பலர் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள்.

### அமைச்சர் கோவி.செழியன் பங்கேற்பு!

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்,எல்,ஏ, தீர்மானங்களை விளக்கி சிறப்புரை!

தஞ்சை, அக். 25 -

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் பருமழை காலங்களில் மக்களுக்கு உதவுவது, "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சி கூட்டத்தில் திரளாக கலந்து கொள்வது உள்ளிட்ட முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் கும்பகோணம், மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் க. நசீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, எஸ். துரைமுருகன், நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

இதில் தொகுதி பார்வையாளர்கள் பி.எம்.ஆனந்த், முனைவர் குறிஞ்சிவாணன், இரா.ரமேஷ், தஞ்சை மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி உள்ளிட்ட ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1. கழகத் தலைவர் அவர்களின் திட்டமிடலின்படி வருகின்ற சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை கழகம் மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாட்டை வளைத்திட முயற்சிக்கும் வஞ்சக சூழ்ச்சி கொண்ட ஒன்றிய பாஜக அரசின் முன்பு "தமிழ்நாடு தலைகுனியாது" என்ற பரப்புரையை கழகம் தொடங்கவுள்ளது. அதன் ஒருபகுதியாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் கழத்தின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற முன்னெடுப்புக்காக "கழக மாவட்ட செயலாளர்கள் மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி பார்வையாளர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக செயலாளர்களுக்கான பயிற்சிக் கூட்டம்" வரும் 28.10.2025 செவ்வாய்கிழமை, காலை 9.00 மணி அளவில் மாமல்லபுரம், ஈ.சி.ஆர்.சாலையில் உள்ள "கான்ஃப்ளூயன்ஸ் ஹால்" (Confluence Hall)ல் நடைபெற உள்ளது. இப்பயிற்சி கூட்டத்தில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர் தவறாது கலந்து கொள்வது என இக்கூட்டத்தில் தீர்மானிக்க ப்படுகிறது.

2.நவம்பர் 27 அன்று பிறந்தநாள் காணும் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதோடு அன்றைய தினம் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கழக இருவர்ண கொடியேற்றி, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவது என இக்கூட்டத்தில் தீர்மா னிக்கப்படுகிறது.

3. SIR (Special Intensive Revision) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு பணியை இந்திய தேர்தல் ஆணையம் தொடங்கியதால் நாம் விழிப்புடன் செயல்பட வேண்டும், ஏற்கனவே பல்வேறு கூட்டங்களில் தலைமைக் கழகத்தாலும், மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் திரு என். ஆர்.இளங்கோ அவர்களாலும், மாவட்டக் கழகத்தாலும் பல்வேறு வழிக்காட்டுதல்களை கழக நிர்வாகிகளுக்கு தெரிவித்து வருகிறோம். எனவே SIR (Special Intensive Revision), வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு பணியில் கிளைச் செயலாளர்கள், BLA-2, BLC ஆகியோர் இல்லம் தோறும் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில் ஈடுபட்டு பாக முகவர் குறிப்பேடை பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டும். ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் தங்கள் பகுதிக்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்களை அணுகி விழிப்புடன் செயல்பட இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டு கொள்ளப்படுகிறது.

4. தமிழ்நாட்டில் இயற்கை பேரிடராக இருந்தாலும், செயற்கை பேரிடராக இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுடன் மக்களாக நிற்கும் என்பதை நாடறியும், தற்போது பெய்து வரும் பருவமழையில் கடந்த காலங்களில் செயல்பட்டதை போல் இந்த பருவமழை காலத்திலும் மக்களுடன் நின்று அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்திடும் வகையில் உழைப்போம் என்பதை இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

**இரங்கல் தீர்மானம்,**

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் மறைவிற்கும், கும்பகோணம் ஒன்றியம் முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் கொத்தங்குடி தட்டுமால் வழக்கறிஞர் சங்கர் அவர்களின் தந்தையார் சின்னப்பன் அவர்கள் மறைவிற்கும், விசலூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மகாலிங்கம் அவர்களின் மறைவிற்கும், புத்தகரம் முன்னாள் செயலாளர் கலியமூர்த்தி மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



மன்னார்குடி பகுதி நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் ரயில்கள் மூலம் வெளி மாவட்டங்களுக்கு இயக்கம் செய்யப்படுவதை தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார். உடன் மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரிசிவா, கவியரசு, கே.வி.கே.ஆனந்த, வீரா.கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன் உள்ளனர்.



திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவிகள் நகரப் பேருந்துகளில் சிரமப்படாமல் கல்லூரி சென்று வர ஏதுவாக அரசு பேருந்து கல்லூரி வளாகத்திற்கு உள்ளேயே வந்து மாணவிகளை ஏற்றிச் செல்லும் வகையில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், திருப்பூர் மத்திய மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார். இதற்கு கல்லூரி மாணவிகள் நன்றி தெரிவித்தனர். இதில் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன், பகுதி கழக பொறுப்பாளர் மு.நந்தகோபால் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.க,வின் முடிவுரையை எழுதுகிறார் எடப்பாடி பழனிசாமி!

பா.ஜ.க.வின் ஆலோசனைப்படி அமைக்கப்பட்ட வியூக வகுப்பாளர்களின் தவறான வழிகாட்டலில் தப்புத் தப்பாகச் செயல்படுகிறார் அ.தி.மு.க.வின் கடைசிப் பொதுச் செயலாளர் திருவாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

**தமிழ்நாட்டு அரசியல் களத்தில் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் கோலோச்சி வந்த ஒரு மிகப்பெரிய கட்சியின் கடைசிப் பக்கத்தை எழுதிக் கொண்டிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி,**

1967 க்குப் பிறகு சாதாரண குப்பனையும், சுப்பனையும் படிக்க வைத்து அதிகாரத்தில் அமர்த்தி, அவர்களின் வாரிசுகளை இன்று அமெரிக்க அய்ரோப்பிய நாடுகளின் ஒயிட்காலர் ஜாப் எனப்படும் உச்ச பதவிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறது திமுகழக ஆட்சி அதிகாரம் என்பது எடப்பாடிக்குத் தெரியவில்லை.

நூறாண்டுகளுக்கும் மேலாக சுயமரியாதை உணர்வோடு, தேநீர்க் கடையிலும், சவரக் கடைகளிலும், தெரு முனையிலும் அரசியல் பேசிப் பழகி வளர்ந்திருக்கிற தமிழ்நாட்டு மக்கள், பார்ப்பனர்களால் கட்டப்பட்டிருக்கிற ஜாதி, கடவுள், மதம், பண்பாடு என்கிற எல்லாவகை ஆயுதங்களையும் வெறும் பொழுதுபோக்கு விசயங்களாகக் கருதுகிறவர்களே தவிர அரசியலில் கலக்க மாட்டார்கள் என்கிற எளிய உண்மையை, மூவாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து அதிகாரம் செய்கிற பார்ப்பனர்கள் உணர்ந்திருக்கிறார்கள். பாவம், எம்ஜியார் ஜெயலலிதா என்று தமிழ்நாட்டுக்குள்ளேயே குப்பை கொட்டி வருகிற எடப்பாடி பழனிசாமி வகையறாக்களுக்கு இந்த எளிய அரசியல் புரியவில்லை.



சைதை சாதிக்
தலைமைக் கழகப் பேச்சாளர்

அ.தி.மு.கவிலிருந்து பிரிந்து சென்றவர்களை ஒருங்கிணைக்க முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அறிவித்திருந்த பத்து நாள் கெடு முடிந்துள்ள நிலையில், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் "அம்மையார் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு ஆட்சிக்குப் பல்வேறு இன்னல்கள் ஏற்பட்டன. அதிலிருந்து ஆட்சி யையும், கட்சியையும் காப்பாற்றித் தந்தது பா.ஜ.க தான். அந்த நன்றிக் கடனுக்காகத்தான் பா.ஜ.கவோடு தற்போது கூட்டணியில் இருக்கிறோம்" என்று திருவாய் மலர்ந்திருக்கிறார் அ.தி.மு.க தலைவர் எடப்பாடி பழனிச்சாமி. தன்னுடைய நிலைப்பாட்டுக்கு ஆதரவாக திருவள்ளுவரைத் துணைக்கு அழைத்திருக்கிறர். சேக்கிழார் எழுதிய கம்ப ராமாயணத்தை படித்துத் தேர்ந்த பழனிச்சாமிக்கு திருக்குறளும் தெரிந்திருக்கிறதே!

ஆட்சியைக் காப்பாற்றிய பா.ஜ.கவுக்கு நன்றியோடு இருப்பதாகக் கூறும் பழனிச்சாமி, தன்னை முதல்வராக்கிய சசிகலாவுக்கு நன்றியோடு இல்லையே ஏன்? அதே போன்று கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவோடு கூட்டணி சேராமல் தனியாகப் போட்டியிட்டாரே அது ஏன்? "நன்றி மறப்பது நன்றன்று" என்று பேசும் பழனிச்சாமி அவ்வப்போது நன்றியை மறந்து விடுகிறாரே அதன் காரணம் என்ன? பா.ஜ.க. மூத்த தலைவரான அத்வானிக்கு இருப்பதாக அம்மையார் ஜெயலலிதா குறிப்பிட்ட செலெக்ட்டிவ் அம்னிசீயா பழனிச்சாமிக்கும் இருக்கிறதோ? "பன்னீர்செல்வத்தை தர்மயுத்தத்தைத் தொடங்குமாறு நான் தான் கூறினேன்" என்று வெளிப்படையாகவே தெரிவித்தவர் பா.ஜ.கவின் இராஜகுரு ஆடிட்டர் குருமூர்த்தி. பழனிச்சாமிக்கு இன்னல்களைக் கொடுப்பதே பா.ஜ.க. தான். ஆனால் அதை மறைத்துவிட்டு பா.ஜ.க தான் ஆட்சியையும், கட்சியையும் காப்பாற்றியது என்று சொல்லும் பழனிச்சாமி, இதற்குப் பதிலாக ஊழல் வழக்குகளில் இருந்து என்னையும், என் மகனையும், எனது சம்பந்தியையும் காப்பாற்றுவதற்காகவே நான் பா.ஜ.க கூட்டணியில் இருக்கிறேன் என்று வெளிப்படையாகவே சொல்லி இருக்கலாம்.

தமிழ்நாட்டிற்கு பா.ஜ.க ஏராளமான நன்மைகளைச் செய்திருக்கிறது என்று பேசுகிறார் பழனிச்சாமி. தமிழ்நாட்டு மாணவர்களின் உயிரைக் குடிக்கும் நீட் தேர்வு, ஆண்டுதோறும் மின் கட்டண உயர்வுக்கு வழிவகுக்கும் உதய் மின் திட்டம், பள்ளிக் கல்வித் துறைக்கு நிதி தர மறுப்பது, மும்மொழிக் கொள்கை, தொகுதி மறு வரையறை போன்றவற்றில் எந்த நன்மையைச் சொல்கிறார் பழனிச்சாமி?

தமிழ்நாட்டின் 68 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் முகவர்களை நியமிக்கும் தகுதி, நகரம் ஒன்றியம் என குக்கிராமங்கள் வரைக்கும் கிளைக் கழகங்கள், 20% நிரந்தர வாக்கு வங்கி என்கிற மாபெரும் மக்கள் செல்வாக்கு மிகுந்த ஒரு கட்சியை கேவலம் ஒரு சதவீதம் செல்வாக்கு கூட இல்லாத ஒரு கட்சிக்காரன் எங்கேயோ டெல்லியில் இருந்து வந்து, இல்லையில்லை இவர்களை டெல்லிக்கு இழுத்துக் கொண்டுபோய் நிறுத்தி, "நடிகரோட ஜோடி போடலாமா?" னு கேட்கிறான், அதற்கும் கைகட்டி வாய் பொத்தி நின்று ஒருவர் சம்மதிக்கிறார் என்றால் இது அரசியலா? இதன் பெயர் கூட்டணியா? என்பதே தமிழ்நாட்டு மக்களின் தற்போதைய கேள்வி.

**எப்போது நட்டநடு ராத்திரியில் நாலு கார் மாறிப்போய் சந்தையில் மாட்டுத் தரகர்கள் பேரம் பேசுவதுபோல கமுக்கமாக கட்சியை குஜராத் மார்வாடிகளிடம் அடமானம் வைத்துவிட்டு வந்தாரோ அப்போதே அ.தி.மு.க,வின் உண்மைத் தொண்டர்கள் வெறுத்துப் போனார்கள். தமிழ்நாட்டு மக்கள் அதிமுகவை முற்றாக நிராகரித்து விட்டனர்.**

இப்படிப்பட்ட தமிழ்நாட்டில், மக்களால் புறந்தள்ளப் பட்டவர்களும், நிராகரிக்கப் பட்டவர்களுமான அதிமுகபாஜக கூட்டணியில், நாக்பூர் திட்டப்படி பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்ட ஒன்றிரண்டு விளையாட்டு 'பொம்மைகளை' விபரம் புரியாமல் கூட்டணிக்கு அழைத்து மேலும் அசிங்கப் பட்டுப் போன எடப்பாடி பழனிசாமி, விரக்தியின் உச்சத்தில் இருக்கிறார். திமுக கூட்டணிக் கட்சிகளையும், தலைவர்களையும் திட்டித் தீர்த்த பழனிசாமி, இப்போது தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த ஆதரவைப் பெற்று, திராவிடமாடல் அரசின் முதலமைச்சர் அவர்களையும் தரங்குறைந்த விமர்சனங்களைச் செய்து வருகிறார். இதுவும் புதிதல்ல இது அவருடைய தானைத் தலைவியின் வழிதான்.

எடப்பாடி பழனிசாமி அமீத்ஷா வீட்டிற்கு போய் வந்த நாள் முதலாக பா.ஜ.க. கும்பல் கூட்டணி ஆட்சி என்றே சொல்கிறது. அதை வலுவாக மறுக்கக் கூட திராணியற்று திணறிக் கொண்டிருக்கிறார் திருவாளர் பழனிசாமி அவர்கள். இதை அதிமுகவின் தலைவர்கள் தொண்டர்கள் மட்டுமல்ல தமிழ்நாட்டு மக்கள் உட்பட யாருமே ரசிக்கவில்லை. மாறாக, எல்லோரும் சிவசேனை, அகாலி தளம், ஜனதா தளம் கட்சிகளுக்கு ஏற்பட்ட நிலைமையை நினைத்து கலங்கிப் போயிருக்கிறார்கள். தன் சொந்தக் கருத்தை, தன் சொந்த சுயமரியாதையை, தனது சொந்தக் கட்சியைக் காப்பாற்றக் கூட திராணியற்று நிற்கிற பழனிசாமியை நம்புவதற்கு அதிமுக தொண்டர்கள் தயாராக இல்லை.

**தி.மு.க.விற்கு எதிராக, சமூகநீதிக்கு எதிராக பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்ட அதிமுக தமிழ்நாடு சமூக அரசியல் களத்தின் நிலையறிந்து எம்ஜியார் ஜெயலலிதா ஆகியோரால் ஓரளவு பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால், இப்போது தகுதி என்கிற ஒன்றே அறியாத சிறு கூட்டத்தால், சுயமரியாதை என்பதையே உணர்ந்திடாத அடிமைகளால் அதிமுக என்கிற கட்சியின் கடைசி அத்தியாயம் எழுதப்படுகிறது.**

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் முதன்முறையாக இனப்பகைவர்களை நேருக்கு நேர் சந்திக்கிற போரை திராவிட மாடல் அரசு, தி.மு.கழக கூட்டணி எதிர்கொள்கிறது. சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு நிறைவில் மீண்டும் திராவிட இயக்கக் கொடியை நாட்டிட தமிழர்கள் ஓரணியில் திரண்டு போரிட வேண்டும்! ஆம் மானமும் அறிவும் மனிதருக்கு அழகு!!



ஈரோடு மாவட்டம் வள்ளிபுரத்தான் பாளையத்திலும், அதனைத் தொடர்ந்து நசியனூரிலும் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று முன்தினம் (23.10.2025) நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி தலைவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.